பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 25 இதழ் 86 ஆ. அவ். 29

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 8-5-78




RECEIVED 1978-5-08 PERIODICALS DIVISION UNIVERSITY OF SRI LANKA LIBRARY ★ CAMPUS

## எம். ஜி. ஆர். அமெரிக்கா விஜயம்

(சென்னை)

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், ஜூலை மாதம் முதல் வாரத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்கின்றார். இந்த விபரத்தை அவர் இன்று பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பை ஏற்றுச் செல்லும் தமிழக முதல்வர் எத்தனை நாட்கள் அங்கு தங்கியிருப்பார் என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை.

# பத்மநாதன் கொலை 3 இளைஞர்கள் மீது விசாரணை!

# கையிலும் கழுத்திலும் சூடு!

## மரணவிசாரணை 15-ம் திகதி

(யாழ்ப்பாணம்)

**சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பத்மநாதன் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப்பட்டது தொடர்பாக 3 இளைஞர்கள், நேற்று பொலிஸாரினால் விசாரணைக்குட் படுத்தப்பட்டனர்.**

**பலத்த கண்காணிப்பு**

சந்தேக நபர்களான இளைஞர்களைத் தேடி, பொலிஸார் யாழ். குடாநாடு முழுவதும் பலத்த தேடுதல் நடத்தி வருகின்றனர். கரையோரப் பகுதிகளிலும், பலத்த கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முக்கிய சந்திகளில் பொலிஸார் வாகனங்களை நிறுத்தி சோதனை செய்து வருகின்றனர். பஸ்களும் சோதனை செய்யப்பட்டு வருகிறது.

இரகசிய பொலிஸ் கோஷ்டியொன்று நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இன்ஸ்பெக்டர் பத்மநாதனின் மரண விசாரணை இம்மாதம் 15-ம் திகதிக்கு பின் போடப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை, யாழ். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் இது சம்பந்தமான விசாரணைகளுக்கு ஏற்பாடு செய்தார். யாழ்ப்பாண நீதிமன்ற நீதவான் திரு. கே. வி. நவரத்தினம், யாழ். பொலிஸ் அதிபர் திரு. ரன்முத்துகல, வடபிரதேசத்திற்குப் பொறுப்பான டி. ஐ. ஜி. திரு. அனுசெனிவரத்தின ஆகியோர் யாழ். பெரியஆஸ்பத்திரியில் நின்று பிரேதபரிசோதனை, மரண விசாரணை சம்பந்தமான நடவடிக்கைகளை அவதானித்தனர்.

**குண்டுகள் எடுக்கப்பட்டன**

நேற்று காலை பிரேத பரிசோதனை நடைபெற்று இரண்டு குண்டுகள் உடலிலிருந்து எடுக்கப்பட்டன. இவை ரசாயனப் பரிசோதனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இன்ஸ்பெக்டர் பத்மநாதனின் கையிலும், கழுத்திலும் இருதுப்பாக்கி சூடு பிடித்துள்ளன.

நேற்றுக் காலை பிரேதபரிசோதனையின் பின் சடலம் இவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இன்று மாலை 4 மணிக்கு சகல பொலிஸ் மரியாதைகளுடனும் பிரேத ஊர்வலம் நடைபெறவிருக்கின்றது.

**35 வருட பொலிஸ் சேவை**

பொலிஸ் சேவையில் 35 வருடங்கள் சேவையாற்றிய இன்ஸ்பெக்டர் பத்மநாதனுக்கு இறக்கும் போது 55 வயது. 1942ம் ஆண்டில் இவர் பொலிஸ் சேவையில் சேர்ந்து நாட்டில் பல பாகங்களிலும் சேவையாற்றிய பின்னர், கடைசியாக, யாழ்ப்பாணம் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவில் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றினார்.

**கச்சதீவு பொறுப்பு**

கடந்த நான்கு வருடங்களாக கச்சதீவுக்கு சென்ற பொலிஸ் கோஷ்டிக்கு இன்ஸ்பெக்டர் பத்மநாதனே தலைமை தாங்கி சென்றார். இவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும், 3 பெண் பிள்ளைகளும் உண்டு.

## யாழ். ஆயுள் கல்லூரி விவகாரம் தீர்ந்தது

### அதிபராக ஜெகோரட்ணம் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். லங்கா சித்த ஆயுள் வேதக்கல்லூரி நிர்வாகத்திற்கிடையில் நிலவிவந்த பிரச்சினை யாழ். மாவட்ட நீதவான் முன்னிலையில் சமாதானமாகத் தீர்க்கப்பட்டது.

இக்கல்லூரி இயக்குநர் சபையைச் சேர்ந்த டாக்டர்களான அம்பலவாணர் வெங்காதரன், அல்லிபுரம் குமாரசாமி, ஏ. வி. இராசரத்தினம், சுந்தரையா அருளானந்தம், கதிரவேலு சிற்றம்பலம் ஆகியோர் அதே இயக்குநர்சபையின் தலைவராயிருந்த திரு. கு. வினோதன், செயலாளர் டாக்டர் ஆறுமுகம் நடராசா ஆகியோருக்கு எதிராக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

ஒருவருடகாலத்திற்கு மேலாக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்த இவ்வழக்கு இறுதியில் புதிய இயக்குநர்சபை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு இரு தரப்பினரும் சம்மதம் தெரிவித்துச் சமாதானமாகச் செல்வதற்கு ஒத்துக்கொண்டதைத் தொடர்ந்து மாவட்ட நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் புதிய இயக்குநர் சபையை நியமித்து டாக்டர்

(6ம் பக்கம் பார்க்க)

## தமிழக அமைச்சரவையில் 4 புதிய உறுப்பினர்கள்

சென்னை, மே. 7

தமிழக அமைச்சரவையில் இன்று புதிதாக நான்கு அமைச்சர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

திருவாளர்கள் கே. ஏ. கிருஷ்ணசாமி, எஸ். டி. சோமசுந்தரம், ஆர். சவுந்தரராஜன், திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் ஆகியோர் இன்று காலை பத்து மணிக்கு சென்னை ராஜ் பவனில் ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி முன்னிலையில் பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் எடுத்துக்

(6-ம் பக்கம் பார்க்க)

# மேலதிகமாக ரூ. 600 கோடி இலங்கைக்கு கிடைக்கும்

(கொழும்பு)

கடன் உதவிகள் வழங்கும் உலக நாடுகள் குழு, இலங்கைக்கு இவ்வருடம் மேலதிகமாக அறுநூறு கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கு உதவி வழங்கியுள்ள இக்குழு, மேலதிகமாகவே 600 கோடி ரூபாவையும் வழங்குகின்றது.

இம்முடிவு, பாரிஸில் நடைபெறும் கடன் உதவிகள் வழங்கும் உலக நாடுகளின் குழுக் கூட்டத்தில் இன்று தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய உலக வங்கி உபதலைவர் திரு டேவிட் ஹொப்பர், இலங்கையில் இப்பொழுது மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை பாராட்டி, மேலதிகமாக நிதிஉதவி வழங்கும் யோசனையை பெரிதும் வரவேற்றார்.

ஒரேவருடத்தில் இவ்வளவு பெரியஅளவில் நிதிஉதவிகள் இலங்கைக்கு கிடைப்பது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## மைசூர் பருப்பு ருத்தல் 4 ரூபா

(கொழும்பு)

மைசூர் பருப்பு ருத்தல் 4 ரூபா வீதம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படவிருக்கிறது. ஒவ்வொரு பங்கீட்டு அட்டைக்கும் வழங்கப்படும்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், ஏற்கனவே 1200 தொன் மைசூர் பருப்பைக் கொள்முதல் செய்துள்ளது.

மைசூர் பருப்பு கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய சில்லறைக் கிளைகளிலும், விற்பனை இலாகா கடைகளிலும், உத்தரவு பெற்ற வியாபாரிகள் கடைகளிலும் விற்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது

(௨)

## சிலப்பதிகார விழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி திடல் முத்தமிழ் கலாமன்றத்தினரால், இன்று சிலப்பதிகாரவிழா ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவிருக்கிறது.

ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் திருவாளர்கள் ரி செல்லத்

(6ம் பக்கம் பார்க்க)

பாண்டிச்சேரியில்

## அண்ணா தி.மு.க. வலுப்பெறுகிறது

பாண்டிச்சேரி, மே 7

கடந்தசில வாரங்களாக ஸ்திரமற்றுக் காணப்பட்ட பாண்டிச்சேரி அமைச்சரவை; இன்று ஏற்பட்ட திடீர் மாற்றத்தைத் தொடர்ந்து வலுப் பெற்றுள்ளது.

திரு. எஸ். இராமசாமியை முதலமைச்சராகக் கொண்ட அ. இ. அ. தி. மு. கழகத்தில் ஆறு சுயேச்சை (சட்ட சபை) உறுப்பினர்கள் சேர்ந்து கொண்டதைத் தொடர்ந்து கழகத்தின் உறுப்பினர்கள் தொகை பதினேழாக உயர்ந்துள்ளது. (பாண்டிச்சேரி சட்ட சபையின் மொத்த உறுப்பினர்கள் தொகை முப்பது ஆகும்).

கடந்த மாதம், பாண்டிச்சேரி சட்டசபையில் ஏற்பட்ட நெருக்கடிகளைத் தொடர்ந்து முதலமைச்சர் திரு. எஸ். இராமசாமி தமதுபதவியை ராஜினாமா செய்யவிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சரையும் மற்றுமொரு அமைச்சரையும் கொண்ட அமைச்சரவையில் மேலும் சில அமைச்சர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

# பதவிகள் வெற்றிடம்

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் தராதரம், வயது, அனுபவம், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளோடு 78-05-22 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பளை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்பத்திரத்திலேயே அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் ரூபா 1/- செலுத்திப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். தபால் மூலம் பெற விரும்புவோர் முத்திரையிடப்பட்ட சொந்த முகவரியிட்ட கடித உறையும் ரூபா 1/- பெறுமதியான முத்திரையும் அனுப்புதல் வேண்டும். சங்கத்தின் நிரந்தர சேவையிலுள்ள பணியாளர்களுக்கு கீழ்க் குறிப்பிட்ட வயதெல்லை பொருந்தாது. விண்ணப்பதாரி குறைந்த பட்சம் 2 வருடங்களுக்காவது யாழ் மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். இச்சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

### 1. பதவி — பொது எழுதுநர் தரம் 1 பதவி 1 நிரந்தரம்

தகைமைகள்: 1. கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி அல்லது 2. பொது எழுதுநர் தரத்திலுள்ள தரம் 11 பதவியில் 5 வருட கால அனுபவம்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 23 முதல் 40 வரை.

பிணை: உரொக்கப்பிணையாக ரூபா 500/- செலுத்துதல் வேண்டும்.

சம்பளம்: 300 — 490 / 10×10, 15×6

### 2. பதவி — கணக்கு எழுதுநர் தரம் 11 பதவி — 4 நிரந்தரம்

தகைமைகள்: 1. கணக்கியல் அல்லது வர்த்தக எண்கணிதம் உட்பட 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரண தரச்) சித்தி அல்லது

2. கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாளர் (சாதாரண) தராதரப்பத்திரம். கணக்கியல் அல்லது எண்கணிதத்தில் அல்லது வர்த்தக எண் கணிதத்தில் திறமைச்சித்தியுடன் கூடிய க. பொ. த. ப. (சாதாரண) இனையுடைய விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 20 முதல் 35 வரை.

பிணை: உரொக்கப் பிணையாக ரூபா 500/- செலுத்துதல் வேண்டும்.

சம்பளம்: 120 — 304 / 6×10, 8×8

### 3. பதவி — பொது எழுதுநர் தரம் 11 பதவி 1 நிரந்தரம்

தகைமைகள்: 1. 6 பாடங்களுடன் கூடிய க. பொ. த. ப. (சாதாரண) தரமும் இரண்டு வருட கால அனுபவமும் அல்லது

2. க. பொ. த. ப. (சாதாரண தரம்) 6 பாடங்கள் இவற்றுள் இரண்டு பாடங்கள் வர்த்தகம், வர்த்தக எண்கணிதம், அல்லது பொருளாதாரவியலாக இருத்தல் வேண்டும்.

3. பொது எழுதுநர் பதவியின் தரம் 111 இல் இரண்டு வருட கால அனுபவம்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 18 முதல் 30 வரை.

பிணை: உரொக்கப்பிணையாக ரூபா 500/- செலுத்துதல் வேண்டும்.

சம்பளம்: 200 — 340 / 8X10, 10X6

### 4. பதவி சிட்டை எழுதுநர் தரம் 11 பதவி 1 நிரந்தரம்

தகைமைகள்: 1. 6 பாடங்களுடன் கூடிய க. பொ. த.ப. (சாதாரண)மும் இரண்டு வருட கால அனுபவமும்.

2. க. பொ. த. ப. (சாதாரண தரம்) 6 பாடங்கள் இவற்றுள் இரண்டு பாடங்கள் வர்த்தகம், வர்த்தக எண்கணிதம், அல்லது பொருளாதாரவியலாக இருத்தல் வேண்டும்.

3. பொதுஎழுதுநர் பதவியின் தரம் 111இல் இரண்டு வருடகால அனுபவமும்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 18 முதல் 30 வரை.

பிணை: உரொக்கப் பிணையாக ரூபா 1000/- ஆதனப்பிணை: ரூபா 5000/-

சம்பளம்: 200 — 340 / 8X10, 10X6

### 5. பதவி - கிராமிய வங்கி முகாமையாளர் தரம் 111 பதவி - 1 நிரந்தரம்

தகைமைகள்: 1. 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரண தர) சித்தியும் ஒரு வருட கால அனுபவமும்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 23 முதல் 40 வரை.

பிணை: உரொக்கப் பிணையாக ரூபா 1000/- ஆதனப்பிணையாக ரூபா 10,000/-உம்

சம்பளம்: 180 — 320 / 8X10, 10X6

### 6. பதவி காசாளர் தரம் 1 பதவி 1 நிரந்தரம்

தகைமைகள்: 1. எண்கணிதத்தில் அல்லது கணக்கியலில் அல்லது வர்த்தக எண்கணிதத்தில் குறைந்த பட்சம் ஒரு திறமைச் சித்தியையேனும் உடைய ஆறு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரண தர) சித்தியும் 2 வருட கால அனுபவமும்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 20 முதல் 35 வரை.

பிணை: உரொக்கமாக ரூபா 1000/-உம் ஆதனப்பிணையாக ரூபா 10,000/-உம்.

சம்பளம்: 300 — 515 / 12.50X10, 15X6

பொதுமுகாமையாளர்.

4-05-78. 9257

---

## மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம் வெற்றுச்சாக்கு விற்பனை

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தில் 3000 வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு. சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திரத்தை ரூபா 200/- முற்பணம் செலுத்தி வாங்கிப் பூரணப்படுத்தி பொதுமுகாமையாளர், மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய் என்ற முகவரிக்கு 11-5-78ம் திகதி 12 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும். கேள்விகளை நிராகரிக்கும் உரிமை இயக்குனர் சபைக்கு உண்டு.

பொதுமுகாமையாளர்

6-5-78 9258

---

## வருடாந்தக் கூட்டம்

[யாழ்ப்பாணம்] புளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டம் திரு. வி. க. விஜயசித்தம்பி தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்காணுவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வி. க. விஜயசித்தம்பி, உப தலைவர்: திரு. சி. இவயாதம்: செயலாளர்: திரு. வ. நீதிராசா, உப செயலாளர்: திரு. இ. இவாகிலிங்கம், தனாதிகாரி: திரு. ச. முருகானந்தன், கணக்காளர்: திரு. பொ. திருப்பதி. 5 பேர் கமிட்டி உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

[ஈ]

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல. MB/14772

வி. முருகேசு கைம்பெண் நாகரட்ணம், பலாலி றோட், யாழ்ப்பாணம். —வாதி.

எதிராக

1. மொகமட் சுல்தான் மொகமட் இஸ்மாயில், இல: 61, பிள்ளையார்கோவில் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
2. மொகிடீன் அப்துல்காதர், இஸ்மாயில் துன் 141 முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

—பிரதிவாதி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் MB/14772ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978ம் ஆண்டு வைகாசி மாதம் 29ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-30 [29-5-78] தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிக்கு ரூபா 3455-00வும் மேலும் ரூபா 200-00 வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975ம் ஆண்டு மாசி மாதம் 26ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975ம் ஆண்டு கார்த்திகை மாதம் 4ந் திகதி வரையுமான வட்டியும், அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 514/20 சதம் கொடுக்கவேண்டியிருப்பதாலும் இத்தொகையில் ரூபா 500/- மட்டும் 20-1-77ல் கொடுபட்டது.

### ஆதனவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "செண்பகநாச்சிக் குளக்கரை" பர நில இலா 4ம், குழி $12\frac{3}{4}$ம். இதன் பதிவு இலக்கம் டி 272/27. இதில் வடக்குப் பக்கமாகப் பிரிக்கப்பட்ட நில பர இலா $1\frac{1}{2}$ம் வீடும் செய்பயிர் வான் பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கு முஸ்லிம் கல்லூரி வீதி, வடக்கு மீருசாகிப்பு பெண் ஆலியா உம்மாவின் ஆதனம். மேற்கு காட்டுப்பள்ளிவாசலின் ஆதனம். தெற்கு மிகுதிக் காணியான முகமட் முகமட் உசேன்தம்பியின் ஆதனம் இதடங்கலும்.

சி. செ. பாலலிங்கம்
(கொமிஷனரும் மதிப்பாளரும்)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
26-4-78, 9250

---

## விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ். மணிக்கூட்டு வீதி, 39-ம் இலக்க ஒழுங்கையில் $3\frac{1}{2}$ பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்குண்டு. 112, அரசடி வீதியில் தொடர்பு கொள்ளவும். 9239

### தேவை

கடற்றொழிலாளரின் தேவைகளான வலை, என்ஜின், உப உறுப்புக்கள் முதலியன, மற்றும் கடலோடு தொடர்புடைய உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றில் அறிவுள்ள முகாமையாளர் தேவை. நிபந்தனைகள், ஊதியம் என்பன நேரில் பேசிக்கொள்ளப்படும். விண்ணப்பிக்கவும்: ஒட்டோஸ் லிமிட்டெட், 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9252

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும் வேலை பழகுபவர்களும் தேவை நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவிஸ்ஸான் அன் மெற்றல் வேக்ஸ், நீர்வேலி. 9224

### CLASSES

I. C. M. A. (A & B) Chartered Preliminary Nov. 1978. A.C.C. A. Institute of Bankers, London A/L (Econ). Classes Commencing 20-5-78 (1-00 P.m) Jaffna Education Centre, No 22, Ramaiah Chettiyar Lane, Hospital Rd., Jaffna. 9213

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

மட்டுவில் வடக்கு காலஞ்சென்ற பொன்னையா தாமோதரம் பிள்ளை என்பவரது மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மட்டுவில் வடக்கு பொன்னையா சங்கரப்பிள்ளை

மனுதார்

மரணசாதன ) இல. 185
நியாயாதிக்கம் )

எதிர்

மட்டுவில் வடக்கு பொன்னையா தாமோதரம்பிள்ளை கைம்பெண் வேலாம்பாள்

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா, மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு வைகாசி மாதம் 26 ஆந் நாளன்று முற்பகல் 9 30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்

நீதிமன்றக் கட்டளைப்படி

நீ. அருளப்பு
பதிவாளர்

19[illegible]8 ஆண்டு வைகாசி மாதம் 3 ஆந் [illegible] இன்று [illegible], என்னால் [illegible].

பெ. [illegible]லிங்கம்
மனுதாரின் பதிவு பெற்ற சட்டத்தரணி. 9256

The Eelanaadu

## கால்நடைகள் தட்டுப்பாடு

இன்னும் இரண்டு ஆண்டுகளில், நாட்டில் கால்நடைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட உள்ளதாக விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. இச்செய்தி யாருக்கும் மகிழ்ச்சி அளிக்கமுடியாது.

கால்நடைகள் பெருகும் விகிதாசாரத்தைவிட, அழிந்துபோகும் விகிதாசாரம் பல மடங்காக இருப்பதே இதற்குக் காரணமென்று திரு. கே. இராமநாதன் என்ற அந்த நிபுணர் சுட்டிக்காட்டியுள்ளாராம்.

கடந்த ஆறுமாத காலத்தில் நாட்டிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை நாற்பது சத வீதத்தால் குறைந்துள்ளதென்றும், இதில் பத்து வீதமானவை போதிய பராமரிப்பின்மையாலும், நோய் காரணமாகவும் அழிந்தனவென்றும், கணிசமான எண்ணிக்கை கொண்ட கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுகின்றனவென்றும் திரு. இராமநாதன் விவசாய அமைச்சுக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கால்நடைகள் நாட்டின் செல்வம். இன்று உழவு இயந்திரங்களும், ரசாயன உரங்களும் கிடைப்பதால் கால்நடைகளின் பெரும் பயனை மக்கள் மறந்துவிட்டார்களென்றே சொல்ல வேண்டும்.

கால்நடை வளர்ப்பில் கவனம் செலுத்துவது குறைந்துவிட்டது. விஞ்ஞானத்தில் முன்னேற்றமடைந்த பல நாடுகள், கால்நடை வளர்ப்பில் கவனம் செலுத்தி, பசும்பாலை நமக்குக் கட்டிப்பாலாகவும், பால் மாவாகவும் எமக்கு அனுப்புகின்றன. நாம் கட்டிப்பாலையும், பால்மாவையும் கியூவில் நின்று, கஷ்டப்பட்டுப் பெற்று அருந்தி மகிழ்கிறோம். அதேசமயம் எமது கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டுகின்றோம். இயற்கையான சத்துள்ள பாலுணவைச் சுவைத்து மகிழ மறந்துவிடுகிறோம்.

கால்நடை வளர்ப்புக்கு ஊக்கமும் உதவியும் அளிக்கப்படவேண்டியது இன்று மிகமிக அவசியமாகிவிட்டது.

குடியேற்றத் திட்டங்களிலும், மற்றும் விவசாயக் குடியிருப்புக்கும் விவசாயச் செய்கைகளுக்கும் காணி வழங்கும் இடங்களிலும் கால்நடைகளுக்கென மேய்ச்சல் தரைக்குத் தனியாக ஒரு பகுதி ஒதுக்கப்பட வேண்டும்.

இந்தியாவில் கால்நடை வளர்ப்புக்கு ஊக்கமும், உதவியும் அளிக்கும்பொருட்டுச் சிறந்த கால்நடைகளுக்குப் பரிசு வழங்கும் திட்டம் செயல்பட்டுவருகிறது. சிறந்த கால்நடை வளர்ப்பவருக்குப் பரிசு மட்டுமல்ல, 'கோபாலரத்தினம்' என்ற பட்டமும் வழங்கப்பட்டதுண்டு.

நமது நாட்டிலும் இப்படியான பரிசு, பட்டங்கள் வழங்கும் திட்டங்களையும் கொண்டுவந்து செயல்படுத்துவது நல்லது.

இதேசமயம், பசுக்களையும், மறி ஆடுகளையும் இறைச்சிக்காக வெட்டுவதையும் தடைசெய்யவேண்டியதும் அவசியமாகும்.

மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக என்னென்னவெல்லாமோ செய்யப்படுகின்றன. வானொலியும் பெரும் பகுதியை இந்தப் பிரசாரத்திற்காகச் செலவிடுகிறது. கால்நடை வளர்ச்சிக்காக ஏன் அதிக அக்கறை எடுக்கக்கூடாது?

கால்நடைகள் வளர்ச்சிக்காகத் தனி அமைச்சோ அல்லது தனித் திணைக்களமோ உருவாக்கினால் கூட நல்ல பயன் கிடைக்கும் என்றே நம்பலாம்.

## 3 வாரம் கமிஷன் விசாரணை

(கண்டி)

சன்சோனிக் கமிஷன் விசாரணை திரு. எம். ஸி. சன்சோனி முன்னிலையில் கண்டியில் சுமார் 3 வார காலம் நடைபெறும்.

கண்டி சாரணர் இயக்க தலைமைக் காரியாலய மண்டபத்தில் விசாரணை இம்மாதம் 15ம் தேதி ஆரம்பமாகும்.

சுமார் நூற்றுக்கு மேற்பட்டோர் சாட்சியமளிப்பதற்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான், திரு. செல்லச்சாமி ஆகியோரும் சாட்சியமளிக்கவிருக்கின்றனர். சட்டத்தரணி சோக்ஸி, சாட்சிகளை வழி நடத்துவார்.

அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் சார்பிலும் சிலர் சாட்சியமளிக்கவிருக்கிறார்கள். (ஈ)

## படம் இலவசம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 24ம் தேதி திருஞானசம்பந்தர் குருபூசை தினத்தைக் கொண்டாடவிருக்கும் சபைகள், மன்றங்களுக்கு யாழ். மில்க்வைற் ஸ்தாபனத்தார், சுவாமிகளின் உருவப் படத்தை இலவசமாக வழங்க முன்வந்துள்ளனர்.

# சுதந்திரா - இடதுசாரிகள் மீண்டும் இணையுமா?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் அரசியல் தொழிற்சங்க ரீதியில் இணைவதற்கு இடதுசாரித் தலைவர்களுள் பலர் சுதந்திரக்கட்சித் தலைவியுடனும் கட்சித் தலைமைப் பீடத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரிகிறது.

திரு. வாசுதேவ நாணயக்காரரவின் லங்கா சமசமாஜக் கட்சி திரு. நந்தா எல்லேவலயின் மக்கள் ஜனநாயகக் கட்சி, திரு. நா. சண்முகநாதனின் பீக்கிங் சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி, திரு. பாலா தம்புவின் வர்த்தக ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகளே சுதந்திரக்கட்சித் தலைமைப்பீடத்துடன் பேச்சு நடத்தியதாகத் தெரியவந்துள்ளது. (ம-இ)

## படகுசேவை ஸ்தம்பிதம்

(வவுனத்தீவு)

கன்னன்குடா - திமிலைதீவுத் துறையில் கோட்டார் படகுச்சேவை இயந்திரக் கோளாறு காரணமாக ஸ்தம்பிதமடைந்துள்ளது. இதனால் நூற்றுக்கணக்கான பிரயாணிகள் இரு கரைகளிலும் பிரயாண வசதியின்றி அவதியுறுகிறார்கள்.

மேற்படி கடவையில் மீன்பிடித்தோணிவசதிகளும் இல்லாதபடியால் ஆசிரியர்கள், தொழிலாளர்கள் போன்ற பல தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். (அ)

“கூட்டுறவு ஊழியர்

## தொழில் கோட்டுக்கு மனுச் செய்ய உரிமை வேண்டும்”

(யாழ்ப்பாணம்)

100 குடும்பங்களுக்கு ஒரு சங்கக் கிளை இருக்கவேண்டும். 2500 குடும்பங்களை கொண்ட 25 கிளைகளோடு ஒரு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் அமையவேண்டும் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒரு மொத்த களஞ்சியம் அமைய வேண்டும்.

நீதிஅமைச்சர் தலைமையிலான கூட்டுறவு மறுசீரமைப்பு ஆலோசனை குழுவிற்கு தமிழ்ஈழ ஜி ஜி. காங்கிரஸ் செயலாளர் திரு. இ. வ. முதலியார் அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: கிளைக்குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும். கமிட்டி உறுப்பினர்களை, கிளைகள் அங்கம் வகிக்கும் பொதுப்பிரதிநிதிகள் தெரிவு செய்யவேண்டும். அத்துடன் 3 நிர்வாக உறுப்பினராக பொதுமுகாமையாளரோ, கணக்காளரோ, விவசாய உத்தியோகத்தரோ இருக்க வேண்டும் 9 இயக்குனர்களும் தலைவரும் உபதலைவரும் தெரிவுசெய்யவேண்டும்.

ஒரு நெறியாளர் குழுவை கூட்டவோ, கலைக்கவோ அவ்வப்பகுதி கூட்டுறவு ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும்.

ஊழியருக்கு எதிராக எடுக்கும் ஒழுக்காற்று விசாரணைகள் ஒரு மாத காலத்திற்குள் தீர்ப்பு வழங்கவேண்டும்.

வேலை நீக்கம் செய்யப்படும் ஊழியர்கள் தொழில் கோட்டுக்கு மனுச்செய்ய உரிமை வழங்கப்பட வேண்டும்

விவசாய, கடற்றொழில் கடன்களை காலதாமதமின்றி வழங்க ஏற்பாடுசெய்யவேண்டும்.

அரசியலை கூட்டுறவு இயக்கத்தில் திணிக்கக்கூடாது. அரசியல் திணிக்கப்பட்டால் ஒற்றுமை குலைந்து சங்கத்தின் வளர்ச்சி குன்றிவிடும்.

அந்தந்த பகுதி மூலவளத்தைக் கொண்டே தொழில்கள் அமையவேண்டும்.

சங்க ஊழியர்களாக அந்தப்பகுதி எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முதலிடம்வழங்கி திறமைசாலிகளை நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்ய வேண்டும்.

ஆசிரியருக்குக் கடிதம்:

# கேரதீவு-சங்குப்பிட்டி பாதை

1. மேற்படி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சங்கத்திற்குரிய வள்ளம் கலப்பற்று இயந்திரவேலை செய்வதற்கு விடப்பட்டிருப்பதால், தனியார் வள்ளம் மூலமே இச்சேவையைச் சங்கம் தற்சமயம் செய்வித்து வருகிறது. எமது சங்கத்திற்குரிய இரு வள்ளங்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதும் தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் எதுவுமின்றி சேவையைச் சீரிய முறையில் செய்யலாம் என்பதில் ஐயமில்லை.

2. பிரயாணிகளின் கட்டுப்பாடற்ற தன்மையால் வள்ளத்தின் ஒருபெண்மணி தடுக்கி வீழ்ந்ததும் ஏற்பட்ட பதட்டநிலையில் பிரயாணிகள் ஒரே பக்கமாக குவிந்ததாலேயே வள்ளம் குடைசாய்ந்தது. வள்ளம் கட்டப்பட்ட நிலையில் கரையிலேயே கவிழ்ந்தது என்பதை தங்கள் தவலுக்கு தருகின்றோம். நீங்கள் குறிப்பிட்ட சிறியபடகை நாம் சேவைக்கு வைத்திருக்கவில்லை.

### 3. மூக்கியமானது

கேரதீவு-சங்குப்பிட்டிக் கடல் ஆழமற்ற பரவைக் கடலாகும். இதில் பல ஆண்டுகளுக்கு முன் ஆழமாக்கப்பட்ட ஓர் ஓடை வழியாகவே வள்ளம் ஓடப்பட்டு வருகின்றது இந்த ஓடை தூர்வையாகிவிட்டதால் சிற்சில இடங்களில் 3, 4 அடிவரையே ஆழமுடையனவாகக் காணப்படுகின்றன. இதனால் சேற்றைக் கலக்கியபடி வள்ளம் தரைதட்டிச் செல்கிறது. எமது வள்ளங்கள் வாட்டர்பம் எஞ்ஜின்களையே கொண்டிருப்பதால் இவை இந்நிலையால் பாதிப்படைகின்றன என அறியக்கிடக்கிறது. திடலில் வள்ளம் பொறுத்த சந்தர்ப்பங்களும் உண்டு. வள்ளம் ஓடும் வழியை ஆழமாக்குமாறு சங்கம் வேண்டியும் சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை எதுவித முயற்சியும் எடுக்கவில்லை. காலகதியில் மேலும் இக்கடல் மார்க்கம் தூர்வையாகிவிடும். இதனால் வள்ளச்சேவையைக்கூட நடத்தமுடியாமல் போகலாம் என்பதை 'ஈழநாடு'மூலம் அறியத் தருகிறோம்.

4. 1963 ஆம் ஆண்டில் இருந்து மேற்படி சேவையை எமது சங்கமே செய்து வருகின்றது. வள்ள இயந்திர உதிரிப்பாகவில்லை, எரிபொருள் செலவு, ஊழியர் வேதனம் என்பன அதிகரித்த பின்பும் முன்போலவே 25 சதத்தையே சங்கம் பிரயாணிகளிடம் இருந்து (ஒரு நாளில் போகவும் வரவும்) அறவிடுகின்றது. போகவர ஒரு கட்டணச் சீட்டையே பயன்படுத்த விடுவதால் இதனை பல பிரயாணிகள் தவறாக பயன்படுத்துகிறார்கள். இதனால் சங்கத்தின் உண்மையான வருவாய் கிடைக்காமற்போவதை அவதானித்துள்ளோம். வாகனங்களுக்கும் மிகக் குறைந்த கட்டணமே அறவிடப்படுகிறது. இலாப நோக்கம் கருதாது சங்கம் பூநகரிப் பகுதி மக்களுக்காக இச்சேவையைச் செய்ய விரும்புவதால் நட்டம் ஏற்படினும் அதை ஒரு பொருட்டாகக் கருதாது சேவையைத் தொடர்கிறது. தகுந்த பாதுகாப்புடனும், சிறந்த நிர்வாகத்தின் கீழும் இச்சேவையை செய்ய புதிய நிர்வாக சபை முனைந்து நிற்கிறது.

5. கிண்ணியா, காரைநகர் வவுணதீவு போன்ற இடங்களில் போன்ற பாதை மூலம் பிரயாணிகளை ஏற்றி இறக்க வசதி செய்யப்படுவது வரவேற்கத்தக்கது. கேரதீவு-சங்குப்பிட்டி பாதைசேவை பயணிகளை உடனுக்குடன் ஏற்றி இறக்கக் கூடிய விதத்தில் விஸ்தரிக்கப்படுமாயின் ஏனைய துறைகளில் போன்று வள்ளச் சேவை இங்கும் தேவை அற்றதொன்றாகிவிடும். இப்பாரிய பொறுப்பினின்றும் சங்கம்விடுபட என்றும் தயாராகவே இருக்கின்றது.

6. பூநகரிப் பகுதியிலுள்ள முழங்காவில், பல்லவராயன் கட்டு போன்ற குடியேற்றத் திட்டங்கள் அபிவிருத்தியடைய வேண்டுமாயின் கேரதீவு-சங்குப்பிட்டி மகாதேவா பாலம் முடப்படவேண்டும். மேலும் சந்தைப்படுத்தும் வசதி அதிகரிக்க கிராமியப் பொருளாதாரமும் வளர்ச்சியுறும். பூநகரி மிகப் பிற்போக்கான கிராமம் என்ற நிலை மாறி கல்வி கலை, பொருளாதாரம் போன்ற சகல துறைகளிலும் முன்மாதிரிக் கிராமமாக விளங்கும் இவை அனைத்தும் மேற்படி பாலத்தில் தங்கியிருக்கின்றது என்றால் அது மிகை அல்ல.

7. பேருந்தில் ஆசனம் பிடிப்பதற்காக பிரயாணிகள் வள்ளம் கரையைச் சேருமுன் எழுந்து நிற்பதும், கரையை அடைந்ததும் பாய்ந்து இறங்குவதும் ஏறுவதும் வழக்கமாக உள்ளது. வள்ளச் சாரதி. பாதுகாவலர் அறிவுரைகளின்படி கட்டுப்பாடாக நடந்து கொள்வது பயணத்தைப் பாதுகாப்புடன் செய்ய அவசியமாதலால் பிரயாணிகளை இவர்களின் புத்திமதிகளுக்கு செவிசாய்க்கும்படி பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

கா. கார்த்திகேசு.
தலைவர்,
பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி.

## மணிவாக்கு

துன்பத்தைக் கண்டும், தோல்வியைக் கண்டும் பயப்படாதே. துன்பமும் தோல்வியுமே உன் வெற்றிக்கு அறிகுறி.

—விவேகானந்தர்.

## அமைச்சரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தை மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில், தர்மபரிபாலன சபையின் 43 வது வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. வை. ச. செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாகக் கீழ்க்காண்போர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வை. ச. செந்தில்நாதன், உபதலைவர்: திரு. இ. பரமதில்லைராசா, செயலாளர்: திரு வ. கந்தசாமி, உபசெயலாளர்: திரு மு. க. இரத்தினவேலுப்பிள்ளை, பொருளாளர்: திரு. சு. வன்னிநாயகம், கணக்குப் பரிசோதகர்: திரு. எம். பி. சேகர்.

மகாசிவராத்திரி தினத்தன்று மதுபானக் கடைகள், படமாளிகைகள் மூடப்பட்டு புனித நாளாக அமைவதற்கு ஆவன செய்யுமாறு கலாச்சார அமைச்சரை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேறியது. (க)

# பீலிக்ஸ் மேற்பார்வையில் ஆவணங்கள் தீக்கிரை!

## தேவநாயகம் வெளியிட்ட திடுக்கிடும் தகவல்

(கொழும்பு)

திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நீதி மந்திரியாக இருந்த போது நீதி அமைச்சின் பல ஆவணங்கள் எரித்து அழிக்கப்பட்டுள்ளன. இவை அழிக்கப்படுவதை திரு. பண்டாரநாயக்காவே மேற்பார்வையும் செய்துள்ளார்.

இத் திடுக்கிடும் தகவலை நீதி அமைச்சர் திரு கே. டபிள்யூ தேவநாயகம் கடந்த வியாழனன்று தேசிய அரசுப் பேரவையில் வெளியிட்டார்.

திரு. தேவநாயகம் தொடர்ந்து பேசும்போது இந்த ஆவணங்களில் ஒன்றுமட்டும் தப்பியிருக்கிறது ஏனென்றால் திரு. பண்டாரநாயக்க பிரதம மந்திரிக்கு மே 1 ம் திகதி அனுப்பிய கடிதமொன்றுடன் ஆவணம் ஒன்றின் புகைப்படப் பிரதியொன்றும் அனுப்பி வைத்துள்ளார்.

இதன்படி பார்த்தால் புகைப்படப் பிரதி எடுப்பதற்கு மூலப்பிரதி இருக்க வேண்டும். அந்த மூலப்பிரதி திரு. பண்டாரநாயக்காவிடம்தான் இப்போது இருக்கிறது என்று கருதமுடியும் இவ்வாறு திரு. தேவநாயகம் கூறினார்.

காணமல் போயிருக்கும் பைல்களைப்பற்றி விரிவான புலனாய்வுகளை நடத்தும்படி பொலிசாரைக் கேட்கவிருப்ப அமைச்சர் சொன்னார்.

பிரதம மந்திரி திரு. பிரேமதாஸ பேசும்போது நீதியமைச்சர் காணமல் போயிருக்கும் பைல்களைக் கண்டுபிடிப்பதில் பொலிசாருக்கு திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா உதவிபுரிவார் என நம்புவதாக தெரிவித்தார்.



யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கோண்டாவிலில் உள்ள பசையிடும் ஆலையை முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் திரு ஏ. ஏ. யோசப் மின்விசையை அழுக்கி ஆரம்பித்துவைக்கிறார். மேற்படி சங்கத் தலைவரும், நெசவுத்தொழில் அத்தியட்சகருமான திரு.செ. விசுவலிங்கம், திரு.கே. தங்கராஜா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## அங்கோலா மீது தென் ஆபிரிக்கா ராணுவத் தாக்குதல்

நியூயோர்க், மே.6

அங்கோலாமீது தென்னாபிரிக்கா ராணுவத் தாக்குதல் நடத்தியிருப்பது குறித்து உலக நாடுகள் பலவும் கவலை தெரிவித்துள்ளன.

நமீபியாவிலுள்ள ராணுவத் தளத்திலிருந்து இத்தாக்குதலை தென்னாபிரிக்கா நடத்தியுள்ளது.

இதுபற்றி உடனடி நடவடிக்கை எடுக்கும்படி அங்கோலா ஐ. நா. பாதுகாப்புச் சபையைக் கேட்டுக்கொண்டதை அடுத்து பாதுகாப்புச் சபை கூடி இதுபற்றி விவாதிக்கவிருக்கின்றது.

தென்னாபிரிக்காமீது முழு அளவிலான ராணுவ, பொருளாதாரத்தடைகளை ஏற்படுத்த வேண்டுமென அணிசேரா நாடுகளின் இணைப்புப்பணியகம் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

தென்னாபிரிக்காவின் இந்த நடவடிக்கையை ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் வால்ஹெயிமும் கண்டித்திருக்கிறார்.

## யாழ். அமெச்சூர் வெற்றி

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி உதைபந்தாட்டச் சங்க உதைபந்தாட்டக் குழுவினருக்கும் புதிதாக அமைக்கப்பட்ட யாழ். அமைச்சூர் உதைபந்தாட்டக்குழுவினருக்கும் இடையே சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி கிளிநொச்சி ஜெட்டிக்கோ மைதானத்தில் நடைபெற்றபோது யாழ் அமெச்சூர் உதைபந்தாட்டக்குழு 4 -1 கோல்களால் வெற்றி பெற்றது.

கிளிநொச்சி உதைபந்தாட்டக்குழு சார்பில் அருணோதயா கழகத்தைச் சார்ந்த திரு. செல்வமும் யாழ். அமைச்சூர் உதைபந்தாட்டக் குழுவினர் சார்பில் கிறிஸ்பிஸட் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த திரு. மனோகரனும் தலைமை தாங்கினர்.

## பருத்தித்துறை டிப்போவுக்கு கேடயம்

(நெல்லியடி)

இ. போ. ச. யாழ்ப்பாண டிப்போ கட்டுப்பாட்டு அதிகாரிகள் கோஷ்டிக்கும் யாழ் சாலைகள் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியில் யாழ் சாலைகள் கோஷ்டி 2 விக்கட்டால் வெற்றி பெற்றது. பருத்தித்துறைச் சாலையைச் சேர்ந்த திரு. வீ. எஸ். கந்தசாமி 5 ஓவர்களில் 12 ஓட்டங்களை எடுத்து 5 விக்கட்டுக்களை வீழ்த்தினர்.

யாழ். பிராந்திய சாலைகளுக்கிடையே நடைபெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை சாலை வெற்றிக் கேடயத்தைப் பெற்றது. (இ)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(உடுப்பிட்டி)

நெல்லியடி சனசமூக நிலையம் நடாத்தும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகி 21ம் திகதிவரை நெல்லியடி மத்திய கொலித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இச்சுப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் உள்ள பதினெட்டு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. இப்போட்டிக்கான ஒழுங்குகளை நெல்லியடி சனசமூக நிலையச் செயலாளர் திரு. த. செல்வரத்தினம் கவனித்து வருகின்றார்.

## வாய் வாக்குவாதம் கத்திவெட்டில் முடிந்தது

(சங்கானை)

இருவருக்கிடையே ஏற்பட்ட வாக்கு வாதம் கத்திவெட்டில் முடிந்தது ஒருவர் அபாயகரமான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவம் மூளாய் பொன்னாலை என்னுமிடத்தில் நடைபெற்றது.

பொன்னாலை பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த சின்னவன் முருகன் என்பவரே அபாயகரமானகத்தி வெட்டுக்காளாகியவராவார்.

பொன்னாலையைச் சேர்ந்த முத்தன் மகாலிங்கம் என்பவருக்கும் சின்னவன் முருகனுக்குமிடையில் நீண்டகாலமாக பகைமைநிலவிவந்ததாகவும் சம்பவதினம் இவர்களுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதம் உச்சக்கட்டத்தை அடைந்து இறுதியில் கத்திவெட்டில் முடிந்ததாகவும் கூறப்படுகின்றது.

இது பற்றி சங்கானைப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி சப்- இன்ஸ்பெக்டர் எஸ். இராசையா விசாரணை நடத்தினார் முத்தன் மகாலிங்கம் முத்தன் இராசதுரை ஆகிய சகோதரர்கள் சந்தேகத்தின் பேரில் தேடப்படுகிறார்கள்

நேற்றைய பிந்திய பதிப்பில் இவை வெளிவந்தன.

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-45
நாகேஷ்வரராவ் நடித்த
மஞ்சள் மகிமை

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
ஜெய்சங்கர்-தேவிகா நடித்த
அன்புச்சகோதரர்கள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன் நடித்த
ஜானகி சபதம்

வெற்றிகரமான 2-வது மாதம்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—லதா நடித்த
ஊருக்கு உழைப்பவன்

6-வது வெற்றி வாரம்
ராணி (யாழ், நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று
12-ம் திகதி முதல் சிவாஜி — மஞ்சுளா நடித்த
உத்தமன்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜோதி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

விடோ போன்: 7692 (யாழ். நகர்)
ஜெமினி—சரோஜாதேவி
வாழவைத்த தெய்வம்

இன்று மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., விஜயா, நாகேஷ் நடித்த
நல்லநேரம்

சாந்தி (யாழ். நகர்) போன்: 7568,
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி ஜமுனா
மருதநாட்டு வீரன்
— புத்தம் புதிய பிரதி —

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் — சந்திரகலா நடித்த
காலங்களில் அவள் வசந்தம்

Regal (Jaffna) 3rd Crowded Week
Daily 4-45, 7-00 and 9-30 p.m.
TONY CURTIS ROGERMOORE in
SPORTING CHANCE
(Color) (Spy Film)

Rio (Jaffna) Daily 4 Shows
Killers Are Challenged

தொழில் வங்கிமூலம்

# அரசுத்துறையில் 1 லட்சத்து 68 ஆயிரம் பேருக்குவேலை!

(கொழும்பு)

வேலைவாய்ப்பு வங்கிகள் மூலம் ஆண்டுதோறும் அரசாங்கத்துறையில் ஒரு லட்சத்து 68 ஆயிரம் பேருக்கு வேலை வழங்கப்படும்.

இத் தகவலை பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா களுத்துறையில் நடைபெற்ற பாலம் திறப்புவிழா வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

தனியார்துறையில் இத் திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் 4 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வேலைவங்கித் திட்டம் அமுல் செய்யப்படும்போது சகல தொகுதிகளும் சம அளவிலேயே கவனிக்கப்படும் என்றும் பிரதமர் கூறினார். (இ)

## தீ மூட்டப்பட்ட வீட்டில் தாய் குழந்தையை காப்பாற்றினார்

### சந்தேக நபர் றிமாண்டில்

(பண்டத்தரிப்பு)

பட்டப் பகலில் வீடு ஒன்றுக்குத் தீவைத்ததாகசங்கானைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு மல்லாகம்மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட நபர் ஒருவரை இம்மாதம் 14-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

ஆராலியிலுள்ள பொன்னுத்துரை சிவபாக்கியம் என்பவரின் வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. சம்பவதினத்தன்று காலை 8 மணியளவில் சிவபாக்கியம் தமது வீட்டுவளவுக் கிணற்றில் குளித்துக் கொண்டிருக்கும்போது அவர் பார்த்துக் கொண்டிருக்கத்தக்கதாக தங்கராசா என்பவர் வீட்டுக்கு வந்து தீ மூட்டினாராம்.

வீடு எரிவதைக்கண்ணுற்ற அப்பெண் வீட்டினுள்ளே தொட்டிலில் கிடந்த தமது குழந்தையை தூக்கி வெளியில் கொண்டுவந்தாராம். அவரது உடுப்புகள் புத்தகங்கள் துணிமணிகள் உட்பட பொருட்கள் யாவும் வீட்டோடு எரிந்து விட்டதாம்.

இது பற்றி சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டதையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. எஸ். இராசையா, கான்ஸ்டபிள் எல். ஏ. குணரத்தின ஆகியோர் தங்கராசா என்ற சந்தேக நபரைக் கைது செய்தனர். இவரை மல்லாகம் நீதிபதி திரு. ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் ஆஜர் செய்தபோது இம்மாதம் 14ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (அ)

### ஷா கமிஷன் அறிக்கை

புதுடில்லி, மே 7

நெருக்கடிகால அத்துமீறிய செயல்கள் குறித்து விசாரணை செய்துவரும் ஷா கமிஷன் அறிக்கைகள் இம்மாதம் 16ம் திகதிக்கு முன்னர் லோகசபையில் சமர்ப்பிக்கப்படும்.

இத்தகவலை இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் நேற்று லோகசபையில் கூறினார்.

லோகசபையின் இப்போதைய கூட்டத்தொடர் இம்மாதம் 16ம் திகதியுடன் முடிவடைகின்றபோதிலும் அடுத்த கூட்டத் தொடர் ஆரம்பமான பின்னரும் இந்த அறிக்கைகள் மீது விவாதிக்கலாம் என்றும் ஜனதா கட்சி உறுப்பினர் தெரிவித்த புகாருக்குப் பதில் அளிக்கையில் திரு. தேசாய் கூறினார். (இ)

### 500,000 மண்வெட்டிகள்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள மண்வெட்டித் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக 500,000 முதலை மார்க் மண்வெட்டிகள் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

......

### துப்பாக்கிமுனையில் கொள்ளை

(பிங்கிரியா)

ஆயுதந் தரித்த கோஷ்டி ஒன்று ரத்மல்கொட என்ற கிராமத்திலுள்ள வீடொன்றுக்குள் சென்று அங்குள்ளவர்களைக் கட்டிவைத்துவிட்டு 39,527 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

ஐவர் கொண்ட கோஷ்டியினர் கத்தி, துவக்கு, கைத்துப்பாக்கி போன்ற பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தனர். பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்

......

### கிளிநொச்சியில் தொழிற்சங்க ஆண்டுவிழா

(வண்ணார்பண்ணை)

அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டமும் ஆண்டு விழாவும் நேற்று கிளிநொச்சி அலுவலகத்தில் உள்ள மேற்படி சங்க மண்டபத்தில் இக் கிளையின் தலைவரும் மத்திய செயற்குழு உறுப்பினருமான திரு சி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

தாய்ச் சங்க பிரதிநிதிகளும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். (அ)

### காரைநகர் கூட்டணிக் கிளை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைக் கூட்டம், வட்டு எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் கிளாக்கோரியரவத்தில் நடைபெற்றது

கிளைக்குழு உறுப்பினர்களாக கீழ்க்காணும்போர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஏ. ஆர். வி. சோமசுந்தரம், உப தலைவர்: திரு. மு. நாகலிங்கம், இணைச் செயலாளர்கள்: திரு. க. அருணாசலம், திரு. க. வி. குலரத்தினம், தனாதிகாரி: திரு. ஆ. குணலிங்கம். 21 கமிட்டி உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

### பிணையில் செல்ல அனுமதி

(சிலாபம்)

லஞ்ச வழக்கில், களஞ்சியப் பொறுப்பாளர் ஒருவரும், காவலாளி ஒருவரும் சிலாபம் நீதவானால் தலா ரூபா ஆயிரம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சிலாபம் நெல் சந்தைப்படுத்தும் சபையைச் சேர்ந்த இவர்கள், விவசாயி ஒருவரிடம் லஞ்சம் வாங்கியதாகச் சந்தேகத்தின்பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

---

### மின்னலுக்கு சிறுமி பலி

(ஹெவஹெட்ட)

ஹெவாஹெட்டத் தொகுதியைச் சேர்ந்த 10 வயதுச் சிறுமி மின்னலுக்குப் பலியானார்.

பத்தாம்பனை என்ற இடத்தைச் சேர்ந்த முருகேசு சசிகலா என்ற இச்சிறுமி, தெல்தோட்டை நகருக்குச் செல்லும் வழியில் மின்னலுக்குப் பலியானார்.

அனுராதபுரத்தில் மின்னலுக்கு ஐவர் பலியானது தெரிந்ததே.

இன்று . தீர்ப்பு

## கப்பம் வாங்கியதாக கான்ஸ்டபிள்மீது வழக்கு

(யாழ்ப்பாணம்)

20 ரூபா கப்பம் வாங்கியதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படும்.

இவ் வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் யாழ். பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் மைக்கல் என்பவர் வர்த்தகரான எஸ். வேலுப்பிள்ளையிடம் 20 ரூபா கப்பம் வாங்கியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

கடந்த தவணையின்போது எதிரி கோர்ட்டிற்கு வராததினால் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. (க)

### அங்கொடையில் திருட்டு

(அங்கொடை)

அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரியில் நகைகளும், 2 மூடை அரிசியும் மற்றும் உணவுப் பொருட்களும் திருடப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர்களால் அறை உடைத்துத் திறக்கப்பட்டு, இத்திருட்டு நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரத்தில்

## முதியோர் ஆங்கிலக்கல்வி; வார இறுதியில் ஆரம்பம்

(உடுப்பிட்டி)

கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள, பாடசாலையை விட்டு வெளியேறியவர்களும், முதியோர்களும் ஆங்கிலம் கற்பதற்கான வார இறுதி வகுப்புக்கள் உடுப்பிட்டிக் கல்வி வட்டாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வகுப்புக்களில் சேரவிரும்பும் இரு பாலாரும் இம்மாதம் 19ந் திகதிக்கு முன் உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரிக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளார்கள்.

இவ்வகுப்புகள் 1ம், 2ம், 3ந் தரமென மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளதாகப் பிரிக்கப்பட்டுள்ளதென்றும், இவ்வகுப்பில் 3ந் தரத்தில் இறுதிப் பரீட்சையொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்பட்டு, சித்தி எய்துபவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழா

(சுழிபுரம்)

சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழா, வருகிற ஆவணி மாதத்தில் மூன்று தினங்கள் சுழிபுரம், சந்தவனக்கடவை, திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களில் விமரிசையாக நடைபெறவுள்ளது.

சைவப் பெரியார் எழுதிய நூல்கள் யாவும் காட்சிக்காக வைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. பெரியாரின் பழைய மாணவர்கள் விழா நடைபெறுவதற்கான ஏற்பாடுகளையும் கவனித்துவருகின்றனர்.

### யாழ்.வளாகத்தில் ஜப்பானிய மொழி

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத்தில் ஜப்பானிய மொழி கற்பிக்கப்படவுள்ளது.

யாழ். வளாக சுற்றுலாத்துறை பேராசிரியர் கா. இந்திரபாலா ஜப்பானிய மொழியை வளாகத்தில் கற்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளார். இம் முயற்சிக்கு ஜப்பான் நிறுவனமும் பெருமளவில் உதவியுள்ளது

அக்டோபர் மாதம் முதல் புதிய ஜப்பானிய விரிவுரையாளர் நியமிக்கப்படவிருப்பதாகவும் இதன்மூலம் சரித்திர மாணவர்கள் பெரும் பயனடைவர் என்றும் தெரிய வருகிறது. (கா' அ)


## வெளிவந்துவிட்டது!

### G. C. E. O/L சமூகக் கல்வி

முழுப்பாடத்திட்டத்தையும் உள்ளடக்கிய பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஆலோசனைப்படி அனுபவமிக்க பட்டதாரி ஆசிரியர்களால் எழுதப்பட்டது.

வெளியீடு:

கில்னர் அக்கடமி,
கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம். 9222

வேலணை
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)

## பதவி வெற்றிடங்கள்

மேற்படி சங்கத்தின் பீடி தொழிற்சாலைக்கு ஒரு பொறுப்பதிகாரியும், பீடி சுற்றுபவர்களும், பயிற்சியாளர்களும் கோரப்படுகின்றனர்.

பொறுப்பதிகாரி

தகைமை:- நற்சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.
சம்பளம்:- நாள் ஒன்றுக்கு ரூபா 6-50-ம் இதற்குரிய மேலதிக படிகளும்.

பீடி சுற்றுவோர்:- பீடி சுற்றுவதில் அனுபவம் மிக்க பெண்பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:- நற்சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்படல்வேண்டும்.

சம்பளம்:- சுற்றிய 1000 பீடிக்கு ரூபா 7-50.

பயிற்சி பெறுவோர்:- பீடி சுற்றுவதற்கு பயிற்சி பெற விரும்பும் பெண்பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,

பயிற்சி:- இலவசமாக அளிக்கப்படும்: பயிற்சி பெற்றபின் திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

சங்க எல்லைக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 12-5-78

பொது முகாமையாளர்
வேலணை ப. நோ. கூ. சங்கம், வேலணை.
9247

## இ. போ. ச. திருட்டு

# அறுவர் கைது;

### மூவருக்கு தொடர்ந்து றிமாண்ட

[நெல்லியடி]

கடந்த மாதம் பருத்தித் துறை இ. போ. ச. டிப்போ வில் திருட்டுப்போன 3 றேடி யேற்றர் தொடர்பாக புலன் விசாரணைமேற்கொண்ட பருத் தித்துறை பொலிஸார் இ. போ. ச.வில் முன்னர் திருடப் பட்ட 14 றிம்கள், 5 ஒயில் மீற்றர், ஒருமின்விசிறிப்புள்ளி, 2 றேடியேற்றர்களை கண்டு பிடித்துள்ளனர்.

மேற்படி பொருட்கள் திரு டப்பட்டது சம்பந்தமாக இது வரை ஆறு சந்தேகநபர்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர் இவர் களில் மூவர் தலா ஆயிரம் ரூபா பிணையில் விடப்பட் டுள்ள அதேவேளையில் மூவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதவான் திரு. ஏ. கெங்காதரன் உத்தரவிட்டுள் ளார். இம்மூவரில் இருவர் அச்சுவேலியையும் ஒருவர் அல் வாயையும் சேர்ந்தவர்கள் சந் தேகநபர்களுக்கு எதிராக வெவ்வேறுபட்ட குற்றச்சசாட் டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இ. போ. ச. றேடியேற்றர் திருட்டு சம்பந்தமாக தேடப் பட்டுவரும் முக்கியநபர் ஒருவர் விரைவில் கைதுசெய்யப்பட லாம் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

## கட்டாய லீவு

[சங்கானை]

சங்கானை ப.நோ. கூட்டுறவு சங்க பொதுமுகாமையாளர் திரு. வி. கந்தசாமி இம்மாதம் 5-ம் திகதி முதல் கட்டாய லீவில் அனுபபிவைக்கப பட் டுள்ளார்.

முன்னைய நிர்வாகத்தின் போது சங்கத்தில் நடை பெற்ற 46 [1] விசாரணையில் இவர் மேல்சுமத்தப பட்ட குற்றச்சாட்டின் விசாரணை முடிவுறுமையாலேயே இவர் கட்டாய லீவில் செல்லநேர்ந்து தற்போதைய நிர்வாகம் பணி த்துள்ளது

கடந்த காலத்தில் திரு. கந்த சாமி இருமுறை வேலை இடை நீக்கம் செய்யபபட்டது குறிப பிடத்தக்கது. (க)

......

## கிராமசேவகர் இடமாற்றம்

[சுழிபுரம்]

வலிகாமம் மேற்கு சங்கானை உதவி அரசாங்கஅதிபர் பிரிவுக் குட்பட்ட பகுதியில் நான்கு கிராமசேவையாளர் இட மாற்றம் செய்யப்பட்டுள்ள னர்.

புதிதாக உருவாக்கப்பட்ட சுழிபுரம் இழக்கு பிரிவுக்கு கிராம சேவையாளர் இம்மா தம் முதல் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

சுழிபுரம் கிழக்கும் பகுதியில் கடமையாற்றிய திரு. ம. மகா தேவா இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார். சுழிபுரத்தில் கடமையாற்றிய திரு. மு. தர்ம தாசன் தொல்புரத்திற்கும், தொல்புரத்தில் கடமையாற் றிய க. செல்வநாயகம் வட்டு மேற்குக்கும், வட்டு மேற்கில் கடமையாற்றிய திரு. எஸ். பரமசிவம் அளவெட்டி வடக் குப் பகுதிக்கும் இடமாற்றம் றம்செய்யப்பட்டுள்ளனர்.

......

## குழந்தை பரிதாப மரணம்

(மட்டுவில்)

தவறுதலாக மண்ணெண் ணெயைக் குடித்த இரண்டு வயதுப் பாலகன் மரணத்தை தழுவிக்கொண்டான். மட்டு வில் தெற்கைச் சேர்ந்த எஸ். மார்க்கண்டுவின் மகனான இவகுமரன் என்ற குழந்தையே இவ்விதம் பரிதாபமாக மாண் டது.

மண்ணெண்ணையைக் குழந்தை குடித்துப் புரக்கேறி மூச்சுத்திணறி நிலத்தில் விழுந்து துடித்ததாகவும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென் றும் பிள்ளையைக் காப்பாற்ற முடியாமற் பேரய்விட்டதென் றும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விபத்து மரணமெனத் தீர்ப பளிக்கபபட்டது. [க]

## இலங்கை அறிவு இயக்கம்

[கொழும்பு]

இலங்கை அறிவு இயக்கத் தின் நான்காவது ஈராண்டு நிறைவுக் கூட்டம் கொழும்பு விவேகானந்த சபைச் சிறிய மண்டபத்தில் நடைபெற்றது. அடுத்த ஈராண்டுக்குரிய தலை மையை அருட்திரு செல்வரத் தினம் அடிகள் ஏற்றார். புதிய தலைவர் தமது தலைமையுரை யில், "அங்கத்தவர்களுடைய சிந்தனையையும் சமூகத்தின் சிந்தனையையும் வளர்க்க முயற்சி செய்வதே அறிவு இயக்கத்தின் தலையாயகடமை; சாதி, சமய, கட்சியரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் துறைதோறும் புதிய சிந்த னையை, சமூகத்துக்குவேண்டிய பயனுள்ள கருத்துக்களை உரு வாக்கிப் பரப்புவதே அறிவியக் கத்தின் அடிப்படை நோக் கம்" என்றார்.

பின்வருவோர் இ. அ. இ. யின் அடுத்த ஈராண்டுக்குரிய அலுவலர்களாகத் தெரிவுபெற் றனர்.

தலைவர்: அருட்திரு. சா. ம. செல்வரத்தினம், செயலாளர்: திரு. வ. இராசையா, உபசெய லாளர்: திரு. மா. குலமணி, பொருளாளர்: திரு. க. நிரி ஸோசச்சந்திரன், கணக்குப் பரிசோதகர்: திரு. செ. பழ னிச்சாமி. [அ]

---

## 'வடதாரகை' படகு திருத்தப்படுகின்றது

[காரைநகர்]

நெடுந்தீவு- குறிகாட்டுவான் படகுச்சேவையில் ஈடுபடுத் தபபட்டு வந்த வடதாரகை என்னும் இயந்திரபபடகு பழுதடைந்த நிலையில் சீநோர் யாலத்தில் கட்டப பட்டுள்ளது.

பழுதுபார்க்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவரு கின்றன. இராஜேஸ்வரி என் னும் இயந்திரபபடகு தற் போது சேவையில் விடபபட் டுள்ளது. [அ]

---

## பயிற்சி வகுப்பு

(கொழும்பு)

கூட்டுறவு உதவி ஆணையா ளர்களுக்கான ஐந்து நாள் பயிற்சிவகுப்பை, உணவு கூட் டுறவு அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத், பொல்கொல கூட் டுறவுப் பாடசாலையில் இம் மாதம் 8ந் தேதி ஆரம்பித்து வைப்பார்.

# யாழ். வளாகத்துக்கு ஜப்பான் வழங்கிய உதவிகள்

### பேராசிரியர் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

"வாசிப்பது என்பது மனித னைப் பூரணப்படுத்துகின்றது. இத்தகைய பூரணத்துவத் திற்கு மொழியறிவே முக்கிய மானது. இத்தகைய மொழி யறிவிற்கு கல்விக்கூடங்கள் களமாக அமைய வேண்டியது அவசியம். இத்தகைய கல்வி அறிவையும், ஆசியா பற்றிய அறிவையும் வளர்த்துக் கொள்ள ஜப்பான் எடுத்த முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்".

இவ்வாறு இலங்கைப்பல் கலைக்கழக யாழ். வளாக வர லாற்றுப் பிரிவுக்கு ஜப்பான் கல்வி நிறுவனமொன்று வழங் கிய அன்பளிப்புகளைப்பெற்றுக் கொண்டு உரையாற்றிய யாழ் வளாக வரலாற்றுத்துறை பேராசிரியர் திரு. கா. இந்திர பாலா கூறினார்.

அவர் தொடர்ந்து தமதுரை யில் கூறியதாவது:

"இலங்கையிலுள்ளபல்கலைக் கழகத்தின் எந்த வளாகத்தி லும் ஜப்பான் சம்பந்தமான கல்விக்கோ, மொழி கற்பிப்ப தற்கோ இதுவரை வசதிகள் செய்யப்படவில்லை. இக்குறை பாட்டை நீக்கி இந்தவசதிகளை இப்போது யாழ். வளாகத்தில் செய்துகொடுப்பதன் மூலம் யாழ். வளாக மாணவர்கள் ஜப்பான் பற்றிய அறிவைப் பெறுவதற்கும், ஜப்பான் மொழியைக் கற்பிப்பதற்கும் யாழ். வளாகத்தின் வரலாற் றுத்துறை ஒழுங்குகளை மேற் கொண்டுள்ளது.

"இத்தகையதொரு ஆக்கப் பணிக்கு ஊக்கமளிக்கும் வகை யில் நவீன முறையில் இக்கல்வி யைக் கற்பிப்பதற்கு ஜப்பான் நிறுவனம் விலையுயர்ந்த உப கரணங்களைத் தந்துதவியுள் ளது. இம்முயற்சியே ஜப்பான் நிறுவனத்தினரால் முதன் முறையாக இலங்கைக்குச்செய் யப்பட்ட அன்பளிப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

"இவ்வுதவியினால் யாழ் வளாக நூலகத்தில் ஜப்பான் பற்றிய அண்மைக்கால ஆங்கில நூல் கள் பல சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளன. இவற்றின் மூலம் வளாக மாணவர்கள் நற்பயன் பெறுவார்கள் என்று நிச்சய மாக நம்புகின்றேன். இதே வேளை இந்த உதவிகளை எங்க ளுக்கு பெற்றுத்தந்த திரு யோசிருக்கா, தொடர்ந்தும் இதுபோன்ற உதவிகளுக்கு உறுதுணையாக இருப்பதாக உறுதியளித்துள்ளார். அடுத்த தாகத்தான் விஞ்ஞானத் துறைக்கு இதுபோன்ற அன் பளிப்பைச் செய்யவுள்ளதாகக் கூறியுள்ளார். இதனால் விஞ் ஞானப்பிரிவு மாணவர்களும் மேலும் பயன்பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்" என்றார்.

75,000 ரூபா பெறுமதி யான நூல்களையும், மொழி கற்பிக்கும் உபகரணங்களையும் ஜப்பான் கல்விநிறுவனம் சார் பாக அன்பளிப்பாக வழங்கிய ஜப்பானிய தூதரக முதலா வது செயலாளர் திரு. யோசி நாக்காவிடமிருந்து யாழ். வளாகக் கலைப்பகுதித் தலைவர் பேராசிரியர் ஹூதர் ஜெயசிங் கம் பெற்றுக்கொண்டார். இவ் வைபவத்திற்கு வளாக நூலக ர் திரு. ஆர். எஸ். தம்பையா தலைமைதாங்கினார். இவ்வைப வத்தின் இறுதி நிகழ்ச்சியாக ஜப்பான் சம்பந்தப்பட்ட படக்காட்சியும் காண்பிக்கப பட்டது.

ஜப்பானிய தூதரகத்தைச் சேர்ந்த செயலாளர் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தது இதுவேயாகும் என் பது குறிப்பிடத்தக்கது. [ா]

## அங்கணைக் கடவை அம்பாள் கோவில்

[யாழ்ப்பாணம்]

மாவிட்டபுரம் அங்கணை கடவை ஸ்ரீ மீனாட்சி அம் பிகை கோவில் தீர்த்த மண்ட பம், களஞ்சிய அறை, யாக சாலை, திருவமுது தயாரிக்கும் மண்டபம். உற்சவகாலக் குருக்கள் சிவபூசை செய்யும் அறை ஆகியன கிலமடைந்தி ருப்பதாகவும் இவற்றை அவ சரமாகப் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்றும் பிர ஸ்தாப கோவில் பரிபாலகரும் அர்ச்சகருமான சிவ ஸ்ரீ கா. ச. கார்த்திகேயக்குருக்கள் தெரிவித்தார்.

இப்புனருத்தாரண வேலை களை நிறைவேற்றப் பெருந் தொகையான பணம் தேவைப படுவதாகவும் அடியார்களின் உதவியுடனேயே இதனை நிறை வேற்ற முடியும் மென்றும் எனவே மக்கள் இப்பணிக்கு தாராளமாக உதவுவார்கள் என்ற நம்பிக்கை தமக்கு உண் டென்றும் குருக்கள் தெரிவித் தெரிவித்தார் (அ)

## யாழ். ஆயுள்...

[1-பக்க தொடர்ச்சி)

ஆர். ஈ. டபிள்யு. ஜெகோரட் ணத்தை அதிபராகப்பணியாற் றும்படியும் தீர்ப்பளித்தார். புதியசபையின் இயக்குநர் விப ரம் வருமாறு:

டாக்டர் வி. ரி. பசுபதி, பேராசிரியர் அ. சின்னத்தம்பி, டாக்டர் சிவஞானரத்தினம், டாக்டர் சுல்தான் மொகை தீன், டாக்டர் பத்மநாதன், டாக்டர் வேலும்மயிலும்.

புதிய சபையின் முதலாவது கூட்டம் நேற்று முன் தினம் யாழ். லங்கா சித்த ஆயுள்வே தக் கல்லூரியில் நடைபெற் றது.

கல்லூரி சிராவஸ்தி வீதியி லுள்ள அதன் பழைய மண்ட பத்தில் இயங்கிவருகிறது. [அ]

## "நாட்டார் இலக்கிய மரபு"

[காரைநகர்]

"தமிழ் மக்களின் நாட்டார் இலக்கிய மரபுக்கு முற்று முழுவதும் கிராமப்புற சூழ் நிலையே காரணமாகும். கிரா மப்புற மக்களின் வாழ்க்கை நிலையை கிராமிய இலக்கியத் தில் நாம் காணக்கூடியதாக விருக்கின்றது"

இவ்வாறு யாழ். வளாக விரிவுரையாளர் திரு. கே. நாகேஸ்வரன் ஊரி கிராம, அபிவிருத்திச் சங்க மண்டபத் தில் "தமிழ் மக்களின் நாட் டார் இலக்கிய மரபு" என் னும் பொருள்பற்றி பேசுகை யில் கூறினார்.

சுவீடன் நல்லொழுக்க வாலிபர் இயக்கப் பிரதிநிதி யான திரு. எவ். அன்டர்சன் அனுசரணையுடன் ஊரிநல்லொ ழுக்க வாலிபர் இயக்கத் தலை வர் திரு. ஐ. பரமு தலைமை யில் இவ்வைபவம் நடைபெற் றது.

திரு. நாகேஸ்வரன் மேலும் பேசுகையில், கிராமியமக்கள் தங்கள் கலை, கலாசாரத்தை, பண்பாட்டை அன்று தொடக் கம் இன்றுவரை பேணிக் காத்துவருகின்றனர். இப்படி யான நிகழ்ச்சியினை ஏற்படுத்தி வரும் ஊரிநல்லொழுக்கவாலி பர் இயக்கத்தின்பணி வரவேற் கத்தக்கது. இதற்கு பொதுமக் கள் தங்களது பூரணஆதரவை நல்கவேண்டும்" என்று கேட் டுக்கொண்டார்.

## 'திரிபோச' கிடைப்பதில்லையாம்

(மட்டக்களப்பு)

கன்னன்குடாப் பகுதியில் உள்ள மண்டபத்தடி, கரை யாக்கன்தீவு, இலுப்படிச் சேனை ஆகிய பகுதிகளில் கர்ப் பிணிகளுக்கான திரிபோச மா வழங்கப்படுவதில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்து விஷயமாக நட வடிக்கை எடுத்து அப்பகுதி களிலும் திரிபோச கிடைப்ப தற்கு ஒழுங்குசெய்யுமாறு கோரப்படுகிறது.

......

## சிலப்பதிகார...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துரை, இ. முருகேசு, வே. மயில் வாகனம் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். இன்னிசை விருந்து, வில்லுப்பாட்டு, நட னம், நாட்டிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இன்று நடிகமணி வி. வி. வைரமுத்து கோஷ்டியினரின் 'கோவலன் கண்ணகி' சரித்திர நாடகமும், யாழ். நாடகக்கலை மன்றத்தாரின் 'அடங்காப் பிடாரி' நாடகமும் இடம் பெறும். மன்றச்செயலாளர் கள் திரு. அ. வ. வனேசுவரன், திரு. க. வைரமுத்து விழாவிற் கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். [க]

......

## தமிழக—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்.

பதவிப் பிரமாண வைபவத் துக்கு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், மேல் சபைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் மற்றும் அமைச் சர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் சமூகமளித்திருந் தனர்.

## பஹாய் இயக்கப் பிரதிநிதிகள்

[நெல்லியடி]

ஈரான் தேசத்து பஹாய் இயக்கத்தைச் சேர்ந்த சோபானி தம்பதிகள், பருத் தித்துறை பஹாய் உள்ளூர் ஆத்மீக சபைக்கிளைக்கு உள் ளூர் ஆத்மீகசபை அங்கத்தவ ரும் கன்னகம் ஆத்மீக சபைக் கிளையின் தலைவருமான திரு. எஸ். சிவப்பிரகாசத்துடன் விஜயம் செய்தனர்.

......

## எம். ஏ. கியூ. சித்திபெற்றார்

[யாழ்ப்பாணம்]

இலங்கை பல்கலைக்கழக யாழ். வளாகம் மூலம் 1977ம் ஆண்டுதோற்றிய எம். ஏ. கியூ. (இந்து நாகரிகம்) பரீட் சையில் மானிப்பாய் மகளிர் கல்லூரி பொருளியல் பட்ட தாரி ஆசிரியை செல்வி ராதா சோமசுந்தரம் சித்தி யெய்தினார்.

......

## புதிய அதிபர்

(காரைநகர்)

காரைநகர் இந்துக் கல்லூ ரிக்குப்பதில் அதிபராக திரு. கே. சுப்பிரமணியம் நியமிக் கப் பட்டுள்ளார். இவர் அள வெட்டி அருணோதயாக் கல் லூரியில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றியவர். (அ)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிர்வாகத்தார் லால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63-ம் இலக்கத் திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram : "Eenaadu" Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.